பக்கங்கள் நான்கு

06-07-92 திங்கள்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4-50

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆனி மீ 23 உ ஞாயிற்றுக்கிழமை (07-07-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 214

### வடக்கு - கிழக்கில் பணிபுரிய

# பிரெஞ்சு மருத்துவ குழு அரசுடன் ஒப்பந்தம்!

## தொண்டர் நிறுவனங்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்துவதற்கும் ஏற்பாடு

கொழும்பு, ஜூலை 7

வடக்கு - கிழக்கில் தொடர்ந்து மருத்துவ சேவையில் ஈடுபடுவது தொடர்பாக பிரெஞ்சு மருத்துவக் குழு (எம். எஸ். எவ்.) ஸ்ரீலங்கா அரசுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ள இருக்கிறது.

சேவையில் ஈடுபடும் தொண்டர் நிறுவனங்களுக்கும் அதன் பிரதிநிதிகளுக்கும் உரிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் விதத்தில் அரச அதிகாரிகளை புதிய ஒப்பந்தம் கட்டாயப்படுத்தும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் வைத்து பிரெஞ்சு மருத்துவக் குழுவினரின் வாகனத்தின் மீது ஸ்ரீலங்கா விமானப் படை வான் தாக்குதல் நடத்தியதும் →

அதனையடுத்து வடக்கு - கிழக்கில் பணியாற்றிய தனது குழுவின் பிரதிநிதிகள் அனைவரையும் பிரெஞ்சுக் குழு (எம்.எஸ்.எவ். குழு) திருப்பி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## காரைநகர் படையினர் சூடு!

காரைநகர் படை முகாமில் இருந்து நேற்றுக் காலை 5.30 மணியளவில் பொன்னாலைக் கரையோரப் பகுதியை நோக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

இடையிடையே ஷெல் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை—

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று முன்தினம் பகல் 1.30 மணியளவில் அச்சுவேலி செல்வநாயகபுரம், வயாவிளான் குட்டியப்புலம் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. (ஒ-15)

### கொழும்பு மாநகரில்

## கேந்திரப் ■குதிகளில் தமிழ் இளைஞர் காவல்!

கொழும்பு, ஜூலை 7

கொழும்புமாநகரின் கேந்திரப் பகுதிகளில் ஆயுதப் படையினருடன், தமிழ்க் குழுக்களைச் சேர்ந்தவர்களும் காவலில் ஈடுபட்டுள்ளனர்,

கோட்டை, மருதானை ரயில் நிலையங்கள், பஸ் நிலையம், கோட்டைப் பகுதியின் முக்கிய இடங்கள், புறக்கோட்டைப் பகுதி போன்ற பல கேந்திர இடங்களிலும் இவர்கள் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

கட்டுநாயக்கா, இரத்மலானை விமான நிலையங்களிலும் படையினருடன் தமிழ்க் குழுவினர் காணப்படுகின்றனர்.

கொழும்பில் நடந்த கூட்டுப்படைத் தலைமையகக் குண்டு வெடிப்பின் பின்னர் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. [ஒ]

### ராஜீவ் கொலைச் சம்பவம்:

## மேலும் இரு இலங்கையர் புதுடில்லியில் கைதாகினர்!

புதுடில்லி, ஜூலை 7

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக விசேஷ புலனாய்வுத்துறைப் பொலீஸார் புதுடில்லியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த இரண்டு இலங்கைத் தமிழர்களைக் கைது செய்தனர்.

70 வயதான கண்ணன் ஜி. சபாபதி என்பவரும் ஆதிரை என்ற இளம்பெண்ணுமே அவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

புதுடில்லி, பகல்ஹங் நகரில் உள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த அவர்களிடம் இருந்து முக்கிய ஆவணங்களும் 25 ஆயிரம் ரூபாவுக்கான ரசீதுகளும் 19750 ரூபா ரொக்கமும் அப்போது கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவில் தங்கியிருப்பதற்கு அவர்களிடம் தக்க பயண ஆவணங்கள் இருக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட டயறிகளின் படி

(4 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



அப்ப ராவின்ரை ஆட்சி நித்திய கண்டம் பூரண ஆயுசு எண்டது மாதிரித் தான் போலை.........!

## தொண்டர் ஆசிரியர்கள் நாளை நகரில் ஊர்வலம்

யாழ்ப்பாணம், ஜூலை 7

யாழ். நகரில் நாளை (திங்கள்) காலை 9 மணியளவில் தொண்டர் ஆசிரியர்கள் ஊர்வலம் ஒன்றை நடத்த உள்ளனர்.

ஸ்ரான்லி வீதி பட்டப் படிப்புகள் கல்லூரியில் இருந்து ஆரம்பமாகும் இந்த ஊர்வலத்தில் சகல தொண்டர் ஆசிரியர்களையும் பங்குபற்றுமாறு தொண்டர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஊர்வலத்தின் இறுதியில் மகஜர்களும் கையளிக்கப்படவுள்ளன. (ஒ-த)

## மலையக மக்கள் முன்னணி குறித்து அரசு விசாரணை!

கொழும்பு, ஜூலை 7

மலையக மக்கள் முன்னணியின் நடவடிக்கைகள் பற்றி தற்பொழுது பாதுகாப்பு அமைச்சு விசாரணை நடத்தி வருகிறது என்று அறிவிக்கப்பட்டது.

கூட்டுப்படைத் தலைமை அலுவலகத் தாக்குதல் தொடர்பாக தேடப்பட்டு வந்த வரதன் என்பவருக்கு புகலிடம் அளித்தது குறித்து மலையக மக்கள் முன்னணியின் தலைவர் சந்திரசேகரம் பாதுகாப்பு படையினரால் கடந்த சில தினங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்டார் என்பது தெரிந்ததே.

## இந்திய அமைச்சரவையில் சேர அ.தி.மு.க. விருப்பம்

சென்னை, ஜூலை 7

இந்திய மத்திய அமைச்சரவையில் சேர்ந்து கொள்ள அ. தி. மு. க. விருப்பம் தெரிவித்துள்ளது. பிரதமர் பீ. வி. நரசிம்மராவிடம் இது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கோரிக்கை குறித்து தனது கட்சி முடிவு ஏதும் எடுக்கவில்லை என்று பிரதமா பி. வி. நரசிம்மராவ் செய்தியாளரிடம் நேற்றுத் தெரிவித்தார். (ஒ-எ)

# புதிய சபாநாயகர் தெரிவில் காங்கிரஸ் வெற்றி பெறுமா?

### முதல் நிகழ்விலேயே 'மரண அடி' விழலாம்

புதுடில்லி, ஜூலை 7

இந்தியாவில் ஆட்சிப்பீடம் ஏறியிருக்கும் இந்திரா காங்கிரஸ் கட்சியின் சிறுபான்மை அரசு நாடாளுமன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பில் [illegible] னர் புதிய சபாநாயகர் தெரிவிலேயே கடும் சவாலை எதிர்நோக்கியிருப்பதாக அரசியல் அவதானிகள் தெரிவித்திருக்கின்றனர்.

புதிய சபாநாயகராக தமது கட்சியைச் சேர்ந்த ஒருவரே தெரிவு செய்யப்படுவார் என்று பிரதமர் பி. வி. நரசிம்மராவ் நேற்றிரவு நம்பிக்கை வெளியிட்டார்.

ஆனால் அவரின் நம்பிக்கை நிறைவேறுமா என்பது கேள்விக் குறியே என்று அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

(3 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

அல்சேஷன் 45 நாள் நாய்க் குட்டிகள் ஆண், பெண் விற்பனைக்கு உண்டு. தொடர்பு தி. விஸ்வநாதன். ''பத்மாசனம்'' மாரி அம்மன் ஒழுங்கை, திருநெல்வேலி தெற்கு. (17410)

### தேவை

நாட்டு (கல்) தேக்கு விதை தேவை. மில்க்வைற் யாழ்ப்பாணம். (சி-0223)

### அம்பாள் திருமண சேவை

B. Sc., B. A, Teachers ஆகிய மணப்பெண்களுக்கு மணமகன் தேவை. சின்னச்சாமிக்குருக்கள் சண்முக ஐயர், வீரமாகாளி அம்மன் கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (17252)

### ஜெனரேட்டர்

3000 Wக்கும், 4500 W க்கும் இடைப்பட்ட நல்ல செயற்திறனுடைய ஜெனரேட்டர் உடன் தேவை. மண்ணெண்ணெய்யால் இயங்குவதற்கு முன்னுரிமை. க. நிர்மலானந்தன், 52/2, கண்டி வீதி, சுண்டிக்குளி. [ஆஸ்பத்திரி வீதியும், கண்டி வீதியும் சந்திக்கும் இடம்] (17396)

### ரைப்ரைட்டர் சேவை

தட்டச்சு இயந்திரங்கள் (Typewriters) வாங்கவும், விற்கவும் மற்றும் சிறந்த முறையில் திருத்தவும் தொடர்பு கொள்ளவும்: பியூடோ, 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [சி/0194]

### மணப்பெண்கள் தேவை

உங்கள் பிள்ளைகளின் திருமணப் பிரச்சினைக்கு தீர்வுகாண சுவாமியாரைச் சந்திக்கவும். M. B Bs. டாக்டர், B. Sc. பட்டதாரிகள், வங்கி அதிகாரிகள், ஆசிரியர்கள் இன்னும் சிறந்த வெளிநாட்டு மணமக்களும் உண்டு. தொடர்பு: விநாயக திருமண சேவை, 53/5, அன்னசத்திர ஒழுங்கை, கந்தர்மடம். [17255]

### மணமகள் தேவை

யாழ். இந்து லண்டனில் நிரந்தர தொழில் புரியும் 33 வயதுடைய சதய நட்சத்திர மணமகனுக்கு ஓரளவு படித்த, அழகிய மணமகள் தேவை. லண்டனில் வசிப்பவர்களும், லண்டனுக்குச் செல்ல விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம். இல: 329, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (17381)

## கார் விற்பனைக்கு

மொறிஸ் மைனர்

2 ஸ்ரீ 2815

உடன் விற்பனைக்குண்டு

தொடர்பு:
3/6, கேசவப்பிள்ளையார் கோவில் வீதி,
[நாச்சிமார்கோவிலடி],
யாழ்ப்பாணம். [17412]

## ஓராண்டு நினைவஞ்சலி

| தோற்றம்: | | மறைவு: |
|---|---|---|
| 1928 |  | 1990 |
| 10 | | 06 |
| 04 | | 19 |

### அமரர் கணபதி கந்தசாமி

திதி: 08 — 07 — 1991

எங்கள் மீது பாசமும் நேசமும் கொண்டிருந்த குடும்பத்தலைவராகிய தாங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டு ஒன்று கழிந்த போதிலும் தங்களை எங்கள் இதயக்கோயிலில் வைத்துப் பூசித்தபடியே இருக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

நல்லூர் அரசடி,
171/6, 1ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். [17417]

சுன்னாகம்

## ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தான

# சித்திரத்தேர் வெள்ளோட்ட விழாச் சிறப்பு மலர்



**'கதிரமலை நாதனுக்கு கலைமிகு சித்திரத்தேர்'**

உக்கிர ராசசிங்கனால் ஆளப்பட்ட முதல் தமிழ் இராச்சியங்களில் ஒன்றான கதிரமலைப் பதியில் இருந்து அருள்பாலிக்கும்

ஸ்ரீ சௌர்ணாம்பிகை பாகர் பொன்னம்பலவாண சுவாமிக்கு

★ புதியதோர் நாகரவடிவிலான நல்லதொரு சித்திரத்தேர் ★

ராஜஸ்தபதி கலாகேசரி ரதச்சக்கரவர்த்தி
ஈ. தம்பித்துரை அவர்களின்
கைவண்ணத்தில் உருவாகி

**07-07-1991 ஞாயிறு காலை 10 மணிக்கு**
ஊர்ந்து வர உள்ளது.

★ அனைவருக்கும் எழுந்தருளி நாதனின் அருள் கிடைப்பதாக ★

தேர்த்திருப்பணிக்கு நிதி உதவியும், ஏனைய ஒத்துழைப்பையும், வழங்கிய அனைவருக்கும் தேவஸ்தானத்தின் சார்பில் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

திருப்பணியும், விழாவும் சிறப்புற நல்லாசி வழங்குபவர்கள்

சிவஸ்ரீ நா. சோமாஸ்க்கந்தக்குருக்கள்
தி. மாணிக்கவாசகர்
[முன்னாள் கல்விப்பணிப்பாளர்]

## தேர்த்திருவிழா 10-07-1991
## புதன் காலை 9 மணிக்கு நடைபெறும்.

இங்ஙனம்
தேர்த்திருப்பணிச் சபையினர்.

சிவன் தேவஸ்தானம்,
சுன்னாகம்.

[சி-0225]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### கபட யுத்தம் நஞ்சு தரும்!

திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் மக்கள் வாழும் கிராமங்களுக்கு நிவாரணப் பொருள்களை எடுத்துச் செல்வதற்குக் கூடப் படையினர் தடை விதிப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. தமிழ்க் கிராமங்களில் வாழ்வோரை வீடுகளில் வசிக்காமல் அகதி முகாம்களில் சென்று தங்குமாறும் படையினர் நிர்ப்பந்திக்கின்றனர்.

இனப்படுகொலை தவிர்ந்த இந்த வகை அட்டூழியங்கள் யாவும், தமிழ் மக்களை உளவியல் ரீதியாகத் தாக்கும் கொடூரங்கள். அவர்களை உளவியல் ரீதியாகத் தோற்கடிக்க நடத்தப்படும் கபட யுத்தம்.

தமிழ மக்களை உளரீதியாகத் தோற்கடித்து விட்டால் அவர்களின் உரிமைப்போராட்டத்தை இலகுவில் நசுக்கி விடலாம் என்ற கோட்பாட்டுடனேயே அரசு இவ்விதமான மனிதாபிமானம் இல்லாத அநாகரிகமான, காட்டுமிராண்டித்தனமான செயல்களில் ஈடுபட்டு வருகிறது.

ஆனால் இவற்றைச் செய்வதால் அரசு எதிர்பார்ப்பதற்கு எதிரான விளைவு (Counter Productive) ஏற்படும் என்பதை அதன் உயர்மட்டம் உணராமல் இருப்பது அறிவீனமே.

எழுபதுகளில் தமிழ் இளைஞர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட சித்திரவதைகள், சொல்லொணாக் கொடுமைகளே தமிழர் போராட்டம் இன்றைய நிலைக்கு வளர்ச்சி அடைவதற்கு அத்திவாரம் இட்டன. தங்களுக்கு எதிரான கொடுமைகளும், அநீதிகளும், அக்கிரமங்களும் அதிகரிக்க அதிகரிக்க, தமிழர்களின் உரிமை வேட்கையும், சுதந்திர உணர்வும் மேலோங்கி, உடைக்க முடியாத இரும்புபோல இறுகி விட்டன. உயிரைக் கொடுத்தும் விடுதலை பெற்றே தீருவோம் என்ற மன வலிமையையும், ஓர்மத்தையும் அவர்களிடம் வளர்த்துள்ளது.

எனவே தமிழர்களுக்கு எதிரான இனப் படுகொலையையும், அதற்குப் புறம்பான உளவியல் போராட்டத்தையும் நடத்துவதால் தமிழர்களின் மன வலிமையையும், தமது இலக்கை எப்பாடுபட்டும் எய்த வேண்டும் என்ற திட சிந்தையையும் மேன்மேலும் வளர்ப்பதாகவே முடியும்.

இந்தச் சிறிய நடைமுறை உண்மையை உணராமல், ஏற்கனவே விதைத்த வினைக்கு பாதகமான விளைவை அறுவடை செய்யும் அனுபவத்தின் மத்தியிலும், கொழும்பு அரசாங்கம் அந்த வழியிலேயே மீண்டும் நடக்க முயல்கிறது; நடக்கிறது.

தினை விதைத்தால் தான் தினை அறுக்கலாம். தொடர்ந்து வினையையே — நஞ்சையே — விதைத்துக் கொண்டிருந்தால்...?

காஞ்சூர மரத்தை நாட்டி விட்டு, தேனொழுகும் பலாக்கனி பறிக்கலாம் என்று எண்ணுவது எவ்வளவு மடமையிலும் மடமை?...

தமிழர்களுக்கு சொல்லொணாக் கொடுமைகளை இடைவிடாது இழைத்துக் கொண்டு அவர்களுடன் நல்லுறவாகவும், சேர்ந்தும் வாழலாம் என்று எண்ணுவது, பெரும் பித்தலாட்டமே!

# மண்ணில் விழ, விழ புலிகள் எழுவார்கள்

## மில்லர் நினைவுக் கூட்டத்தில் யோகி உரை

பருத்தித்துறை ஜூலை 7

விழ விழ எழுவார்கள் புலிகள். விடுதலைப் புலிகள் உள்ள வரை, இந்த மண்ணில் ஸ்ரீலங்கா இராணுவம் கால் பதித்து நிலைக்கமுடியாது. மில்லர், கொலின்ஸ், காந்தன் போன்ற போராளிகளின் கனவுகள், இலட்சியங்கள் என்று நனவாகின்றனவோ அப்போது தான் அவர்களின் ஆத்மா சாந்தி அடையும்

கரும்புலி கப்டன் மில்லரின் நான்காவது ஆண்டு நினைவு விழா நெல்லியடி மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் மணிவண்ணன் தலைமையில் நடைபெற்றபோது தமிழீழ மக்கள் விடுதலை முன்னணிச் செயலாளர் யோகரத்தினம் யோகி மேற்கண்டவாறு கூறினார்.

நெல்லியடி மாவீரர் கலை அரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த வைபவத்தில் மில்லரின் தாயார் மங்கள விளக்கேற்றினார்.

யோகி தொடர்ந்து பேசியதாவது:-

முதலாவது கரும்புலி மில்லரைத் தொடர்ந்து இன்று எம் மத்தியில் பல கரும்புலிகள் தோன்றியுள்ளனர். அவர்களின் அதிரடித் தாக்குதல்களைத் தாங்கிக் கொள்ள முடியாத அளவு ஸ்ரீலங்கா இராணுவம் நிலைகுலைந்துள்ளது.

ஸ்ரீலங்கா இராணுவம் 1987 ஆம் ஆண்டு ''ஒப்பரேஷன் லிபரேஷன்'' ஒன்றை மேற்கொண்டது. அப்போது மிகக் குறைந்த போராளிகளுடனும், மிகக் குறைந்த துப்பாக்கிகளுடனும் எமது போராளிகள் இராணுவத்தை எதிர்த்துப்போராடினார்கள்.

போராட்டத் தந்திரோபாயத்தின்படி திடீரென தலைமறைவாக வேண்டிய தேவை ஏற்பட்டது. அச்சமயம் பாதுகாப்பு அமைச்சராக இருந்த திரு. அத்துலத்முதலி ஒப்பரேஷன் லிபரேஷனில் 5000 போராளிகளைக் கைது செய்துள்ளதாகப் பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார். அவரின் கூற்றுப்படி வடமராட்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளை முற்றாகக் கைது செய்து விட்டதாகவும், புலிகளை முற்றாக ஒழித்துவிட்டதாகவும் பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகின.

இதன் மறுநாள் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய முகாம் கரும்புலி தாக்குதலுக்கு உள்ளாகி முற்றாகத் தகர்க்கப்பட்டது.

இந்த நடவடிக்கையில் முதலாவது கரும்புலியாகமுன் வந்தவர் கரும்புலி கப்டன் மில்லர்.

அவர் [illegible] சாதுரியமாக வாகனங்களை ஓட்டக் கூடியவர். இரண்டு தினங்களுக்கு முன்பே தனக்கு இந்த நேரம் இறப்பு வரும் என அவர் தெரிந்திருந்தார். தன்னிடமிருந்த பணத்தை சக போராளிகளுக்குப் பிரித்துக் கொடுத்தார். எல்லோரையும் போல் ஒன்றாக இருந்து தமது உணவை உண்டார். அவரிடம் எவ்வித சலனமும் ஏற்படவில்லை. சிரித்த முகத்துடன் குறிப்பிட்ட நேரத்தில் வாகனத்துடன் சென்று தாக்குதலை மேற்கொண்டார் — என்றார்.

இக்கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்டத் துணைத் தளபதி காஸ்ட்ரோ, மக்கள் தொடர்பு, கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் திரு. பரா ஆகியோர் உட்பட மற்றும் பலர் உரை நிகழ்த்தினர்.

(இ-118)

## ஐந்து லட்சம் பேரின் அடையாள அட்டைகள் ரத்து

கொழும்பு, ஜூலை 7

புதிய தேசிய அடையாள அட்டை எடுக்காத ஐந்து லட்சம் பேரின் பழைய தேசிய அடையாள அட்டைகள் ரத்துச் செய்யப்பட விருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

1972-73 இல் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டைகளுக்கு பதில் புதிய அட்டைகளைப் பெற்றுக்கொள்ளும்படி உரியவர்களை ஆட்பதிவுத் திணைக்களம் கோரியிருந்தது.

அதற்கான காலக்கெடு முடிவடைந்த பின்னரும் புதிய தேசிய அடையாள அட்டை எடுக்காமல் சுமார் 5 லட்சம் பேர் உள்ளனர் என்றும் அறிவிக்கப்படுகிறது. [இ-எ]

## மாட்டு வண்டி சவாரி இன்று

மயிலணி, ஜூலை 7

சுன்னாகம் கந்தரோடை வர்த்தகர், விவசாயிகள் கழகம் நடத்தும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி இன்று பிற்பகல் ஒரு மணிக்கு கந்தரோடை மைதானத்தில் நடைபெறும். (த-89)

## மேற்பார்வையாளர் பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், ஜூலை, 7

தொழில் பயிலுநர் சபையால் நடத்தப்படும் கட்டட நிர்மாண மேற்பார்வையாளர் பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விவரங்கள் தொழில் நுட்பக் கல்லூரி அறிவித்தல் பலகையில் போடப்பட்டுள்ளன.

இம்மாதம் 10 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பங்கள் கல்லூரி அதிபரிடம் கையளிக்கப்பட வேண்டும். [த]

## ஒன்று கூடல்

யாழ்ப்பாணம் ஜூலை 7

சுய விருப்பத்தின் பேரில் இளைப்பாறிய வலிவடக்கைச் சேர்ந்த ஒய்வூதியர்களுக்கான ஒன்று கூடல் நிகழ்ச்சி இன்று 7 ஆம் திகதி முற்பகல் 9-30 மணிக்கு மல்லாகம் இந்து மகாவித்தியாலயத்தில் நடைபெறும். (த)

## பண்டத்தரிப்பில் இன்று நாடகம்

யாழ்ப்பாணம், ஜூலை 7

நாடக அரங்கக் கல்லூரியினரின் 'உயிர்த்த மனிதர் கூத்து' நாடகம் இன்று பிற்பகல் 4-30 மணியளவில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி அரங்கில் மேடையேற இருக்கின்றது.

முற்பகல் 10 மணிக்கும், பிற்பகல் 4 மணிக்கும் இரு காட்சிகளாக இடம்பெற இருந்த இந்நாடகம் பிற்பகல் 4-30 மணிக்கு ஒரே காட்சியாக இடம்பெறும் எனவும் காலைக்காட்சிக்கென பெறப்பட்ட அன்பளிப்புச் சீட்டுக்கள் மாலைக் காட்சிக்கும் செல்லுபடியாகும் என விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தினர் அறிவித்துள்ளனர்.

இந்நாடகத்திற்கான அனுமதிச்சீட்டுக்களை பண்டத்தரிப்பு, மாதகல் பகுதிகளிலுள்ள விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரின் பிரதேச அலுவலகங்களிலும், மாலை மண்டப வாயிலிலும் பெற்றுக்கொள்ளலாம். (இ)

## 17 லட்சம் பேர் அகதிகள்!

கொழும்பு, ஜூலை 7

இலங்கையில் இப்போது அகதி முகாம்களிலும் முகாம்களுக்கு வெளியேயும் இடம் பெயர்ந்து வசிப்பவர்களின் எண்ணிக்கை 17 லட்சம் என்று மதிப்பிடப்பட்டு உள்ளது.

இத்தகவலை புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு அமைச்சுச் செயலாளர் திரு. கிறிஸ்டி சில்வா நேற்று இடம்பெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டில் வெளியிட்டார். (இ-எ)

## விம்பிள்டன் போட்டியில் ஸ்ரெபி கிராப் சாம்பியன்!

விம்பிள்டன், ஜூலை 7

விம்பிள்டன் மகளிர் ஒற்றையர் டென்னிஸ் ஆட்டத்தில் ஜேர்மன் வீராங்கனை ஸ்ரெபி கிராப் ''சாம்பியன்'' பட்டத்தைச் சுவீகரித்துக் கொண்டார்.

நேற்று லண்டன் விம்பிள்டனில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் ஸ்ரெபி கிராப், ஆர்ஜென்ரினா நாட்டு வீராங்கனை கபிரியல்லா சபார்டினியை 2—1 என்ற செட் கணக்கில் தோற்கடித்தார்.

விம்பிள்டன் போட்டியில் ஸ்ரெபி கிராப் மூன்றாவது முறையாகச் சாம்பியனாகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-5)

## இன்று கூட்டம்

வலிகாமம் பிரிவில் முறைசாராக் கல்வித் திட்டத்தின் கீழ் முதலுதவிப் பயிற்சி பெற்று நிலையங்களில் கடமையாற்றுவோருக்கான மாதாந்த ஆலோசனைக் கூட்டம் நல்லூர் சாதனா பாடசாலையில் இன்று காலை 9. 30 மணிக்கு நடைபெறும்.

## தமிழீழ மீட்பு நிதி

பாஷையூர் சிற்றூரவைக்கு உட்பட்ட பிரதேசத்தில் இன்று 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணி முதல் நண்பகல் 12-30 மணி வரை பாஷையூர் புனித அந்தோனியார் பெண்கள் பாடசாலையில் வைத்து தமிழீழ மீட்பு நிதி பெறப்படும். [இ-30]

## புதிய...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆளும் இந்திரா காங்கிரஸ் கட்சியின் கூட்டணி நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மை பெறுவதற்கு இன்னும் சுமார் பதினைந்து எம்.பிக்களின் ஆதரவு தேவை என்றாலும் இதுவரை எந்த எதிரணிக் கட்சிகளும் இந்திரா காங்கிரஸ் அரசை ஆதரிக்கப்போவதாக பகிரங்கமாக அறிவிக்கவில்லை. இதனால் காங்கிரஸ் கட்சி நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்குமா என்ற சந்தேகம் எழுந்திருக்கிறது.

எனினும் புதிய பொதுத் தேர்தல் ஒன்றை எதிர்நோக்கக்கூடிய நிதிநிலைமை இந்தியாவுக்கு இல்லை என்பதால், தேர்தல் நடத்தவேண்டிய தேவை ஏற்படாமல் தவிர்ப்பதற்காக —

இந்திரா காங்கிரஸ் அரசு நம்பிக்கை வாக்கெடுப்பில் தப்பிப் பிழைக்கக்கூடிய விதத்தில் எதிர்க்கட்சிகள் நம்பிக்கை வாக்கெடுப்பின்போது நடந்துகொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் சபாநாயகர் தெரிவில் எதிரணிகள் விடாப்பிடியாக நிற்பதுபோல் தெரிகிறது.

எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவரையே புதிய நாடாளுமன்றத்தின் சபாநாயகராக தெரிவுசெய்யவேண்டும் என்று எதிர்க்கட்சிகள் 'கச்சை' கட்டிக்கொண்டு நிற்கின்றன.

முன்னாள் சபாநாயகர் ரபிராயை சபாநாயகர் தேர்வின்போது வேட்பாளராக நிறுத்தப்போவதாக ஜனதா தள் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகள் கூட்டாக நேற்று அறிவித்தன,

மற்றைய பிரதான எதிர்க்கட்சியான பாரதீய ஜனதாவும் மற்றும் எதிரணியில் உள்ள சில உதிரிக் கட்சிகளும் ரபிராயை ஆதரிக்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அப்படி ஒரு நிலை ஏற்பட்டு, எதிரணி சார்பில் ஒருமனதாக 'ரபிராய்' நிறுத்தப்பட்டால் —

ஆளும் இந்திரா காங்கிரஸ் கட்சி வேட்பாளர் சபாநாயகர் தெரிவில் வெற்றியீட்டுவது கஷ்டமான காரியம் என்றும் —

அது புதிய நாடாளுமன்றின் முதல் நிகழ்விலேயே நரசிம்மராவின் அரசுக்கு கிடைக்கும் ''மரண அடியாக'' வும் அமைந்துவிடக் கூடும் என்றும் அவதானிகள் தெரிவித்தனர்.

புதிய சபாநாயகர் எதிர்வரும் புதன்கிழமை தெரிவு செய்யப்பட இருக்கிறார். என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Jaffna College
# INSTITUTE OF TECHNOLOGY
Vaddukkoddai

## INTERVIEW

1. 15-07-1991 அன்று ஆரம்பமாகவுள்ள எமது சகல பயிற்சி நெறிகளுக்குமான நேர்முகப் பரீட்சைகள் 08-07-1991 (திங்கட்கிழமை), 09-07-1991 (செவ்வாய்க்கிழமை) ஆகிய திகதிகளில் காலை 9-00 மணியிலிருந்து பகல் 1 மணி வரை நிறுவனத்தின் தலைமையகத்தில் (வட்டுக்கோட்டையில்) நடைபெறும்.
2. எமது யாழ்ப்பாணக் கிளையில் விண்ணப்பித்தோருக்குமான நேர்முகப்பரீட்சைகளும் மேற் குறித்த தினத்திலே வட்டுக்கோட்டையிலேயே நடைபெறும்.
3. இதற்கான அறிவித்தல்கள் சகல விண்ணப்பதாரிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளன.
4. இக் கடிதங்கள் கிடைக்காத விண்ணப்பதாரிகளும் நேர்முகப்பரீட்சைக்கு சமுகமளிக்கும்படி இவ் அறிவித்தல் மூலம் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
5. நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்காதவர்கள் எக்காரணம் கொண்டும், பின்னர் பயிற்சி நெறிகளுக்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.
6. ஏற்கனவே விண்ணப்பிக்க முடியாது போனவர்களும் மேற் குறித்த தினங்களில் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து நேர்முகப்பரீட்சைக்குத் தோற்ற வாய்ப்பு உண்டு.

— பணிப்பாளர்.

[சி-0220]


## ஓராண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்:
21 — 03 — 1981

இறைவனடியில்:
18 — 06 — 1990

### செல்வன் திரவியம் காண்டீபன்
(தீபன்)

(யாழ். இந்து ஆரம்ப பாடசாலை,
4ஆம் ஆண்டு, B பிரிவு மாணவன்)

திதி: 07 — 07 — 1991

கருவைத்து மொட்டாகி மலர்வதற்குள்
காலன் உன்னை அழைத்துச் சென்றான்
ஐந்தாவதாய் அவதரித்த எம்
செல்லக் குழந்தை காண்டீபன்
எல்லோரையும் தவிக்கவிட்டு இறைவனடி
சேர்ந்திருப்பாய் என்றெண்ணி
இருக்கிறோம் இவ்வுலகில்!

உன் பிரிவால் துயருறும்:
அம்மா, அப்பா, அக்காமார், தம்பி.

பலாலி வீதி,
இல, 40, 2ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். [17413]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 7 - 07 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

## பிரெஞ்சு...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அழைத்துக் கொண்டதும் தெரிந்ததே.

தற்போது பிரெஞ்சுக் குழு மீண்டும் வடக்கு - கிழக்கில் பணிபுரிய விருப்பம் தெரிவித்திருக்கிறது.

ஆனால் அதற்கு முன்னர் தமது பாதுகாப்பை ஸ்ரீலங்கா அரசு உறுதிப்படுத்தும் விதத்தில் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ள வேண்டும் என்றும் குழுவினர் வற்புறுத்துவதாகத் தெரிய வருகிறது.

இது தொடர்பாக எம்.எஸ்.எவ். நிறுவனத்தின் இரண்டு சிரேஷ்ட பிரதிநிதிகள் அண்மையில் கொழும்புக்கு வந்து ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் திரு. பிரட்மன் வீரக்கோனுடன் பேச்சு நடத்தினர் என்றும் —

அதையடுத்து ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட ஸ்ரீலங்கா அரசு இணங்கியது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அதனைத் தொடர்ந்து ஒப்பந்த வாசகங்கள் குறித்து அரசுடன் விசேடமாகப் பேச்சு நடத்த பிரெஞ்சுத் தலைநகர் பாரிஸில் இருந்து எம். எஸ். எவ்வின் மற்றொரு பிரதிநிதி கொழும்பு வந்திருந்தார்.

அரசுடன் நடத்தப்பட்ட பேச்சுகள் வெற்றியளித்திருப்பதாக எம். எஸ். எவ்வின் பேச்சாளர் ஒருவர் சொன்னார்.

இதேவேளை—

வடக்கு - கிழக்கில் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ள ஏனைய தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் எம். எஸ் எவ் பிரதிநிதிகள் பேச்சுகள் நடத்தினர்.

வடக்கு - கிழக்கில் பணிபுரிபவர்களின் எண்ணிக்கையை மேலும் ஆறு பேரினால் அதிகரிக்கவும் எம். எஸ். எவ் நிறுவனம் நடவடிக்கை எடுத்திருப்பதாக அறியவருகிறது. (உ-எ)

## மேலும் இரு..
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக அவர்களைச் சந்தேகிப்பதற்குரிய ஆதாரங்கள் கிடைக்கப்பெற்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அவர்கள் இருவரும், ராஜீவ் கொலை தொடர்பாகத் தேடப்பட்டுவரும் ஒற்றைக் கண் சிவராசாவுடன் நேரடித் தொடர்பு கொண்டிருந்தவர்கள் என்றும் விசேட புலனாய்வுத்துறையினர் தெரிவித்தனர்.

அவர்கள் இருவரும் புதுடில்லி தலைமை நீதிவான் முன் ஆஜர் செய்யப்பட்டனர்

30 நாள் பொலீஸ் காவலில் வைக்கும்படி உத்தரவிட்ட நீதிவான், மேல் விசாரணைக்காக அவர்கள் இருவரையும் சென்னைக்குக் கூட்டிச் செல்ல பொலீஸாருக்கு அனுமதியும் வழங்கினார்.

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக சந்தேகநபர்கள் புதுடில்லியில் வைத்துக் கைது செய்யப்பட்டது இதுவே முதல் தடவை என்று சொல்லப்பட்டது.

இதுவரை கைதான பத்துப் பேரில் ஐவர் இலங்கைத் தமிழர்கள். [த-எ]

## 5 முகாம்களுக்கு மூடுவிழா

சென்னை, ஜூலை 7

தமிழ்நாட்டில் உள்ள அகதி முகாம்களில் ஐந்து மூடப்பட்டு, அவற்றில் தங்கியிருந்த இலங்கைத் தமிழ் அகதிகள், வேறு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

பசும் பொன் மாவட்டம் சிவகங்கையில் உள்ள 7 முகாம்களில் இரண்டு மூடப்பட்டு விட்டன. தேவகோட்டையில் உள்ள ஆறு முகாம்களில் 3 மூடப்பட்டு விட்டன.

(த-எ)

## மரண அறிவித்தல்கள்

### அ. சுவாம்பிள்ளை

அ. சுவாம்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியர்) காலமானார். இவர் காலஞ்சென்றவர்களான அந்தோனியாபிள்ளை, றெஜினா ஆகியோரின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிறில்சுவாம்பிள்ளை, சறோஜினி நிக்கிலஸ் (கனடா) மட்டிக்களப்பு, திருமலை ஆயர் மேன்மைதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற ஜொயிஸ், பவளம் [U. K.], காலஞ்சென்ற நீக்லஸ் ஆகியோரின் அன்பு மாமனாரும் வினித்தா, பிரபாகரன், நரேஷ், மனோ, விஜித்தா, வினோ, யூட், மரியா, மாத்தா ஆகியோரின் அன்புப்பேரனும், திருமதி மரியப்பிள்ளை கையித்தாம்பிள்ளை. திரு. அ. ஞானப்பிரகாசம் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று ஞாயிற்றுக்கிழமை 7-7-91 மாலை 4-00 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு அடைக்கல அன்னை ஆலயத்தில் திருப்பலியின் பின்பு புனித மரியன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்,

தகவல்:
Dr. இன்னாசித்தம்பி

25, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம். [17251]

### திருமதி பொன்னையா மலர்மணி

நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட பொன்னையா மலர்மணி 4-7-1991 இல் அகாலமரணமானார். இவர் பொன்னையாவின் [சிவப்பிரகாசம்] அன்பு மனைவியும், ஈஸ்பரம் பொறியியலாளர் [கனடா], சிவநேசன் பொறியியலாளர் (கனடா), பொன்மலர், சிவநாயகி, சிவலதா, உதயகுமார் [கொழும்பு], ஜெயந்தன், சிவகௌரி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்,

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் 4-7-91 வியாழக்கிழமையன்று நடைபெற்று காந்தானம்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இத்தகவலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகிறோம்.

தகவல்:
கணவன், பிள்ளைகள்.

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி. (17418)

### சுப்பிரமணியம் நவமணி

வண்ணார்பண்ணை கேசவில் பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த சுப்பிரமணியம் நவமணி (06.07-91) நேற்று இரவு காலமானார்.

இவர் லோகநாதன் (யாழ். மாநகர சபை பிரதம மின்மாணி வாசிப்பாளர்), கனகேஸ்வரி, ஏகாம்பரநாதன் (சோலைவரிப் பகுதி நடுக்கட்டு உத்தியோகத்தர்), பேரின்பநாதன் (லண்டன்), ருக்குமணிதேவி (ஆசிரியை பெரியபுலம் மகாவித்தியாலயம்), நாகேஸ்வரி (கனடா), குகநாதன் (லண்டன்) ஆகியோரின் தாயாரும், தியாகராசா (மெக்கானிக்), புஸ்பராணி, தேவராணி, யோகமலர், பாலகிருஷ்ணன் (உதவி திட்டமிடல் பணிப்பாளர் கச்சேரி, யாழ்ப்பாணம்) பூபாலசிங்கம் (கனடா) ஆகியோரின் மாமியாரும், பூமணியின் சகோதரியும், லோகேஸ்வரி, அகிலேஸ்வரி, இலங்கேஸ்வரி, கேதீஸ்வரி, அனுரா, குமுதினி, நந்தினி, குமணன், தாமோதரன், சேந்தன், கார்த்திகா, நிருபன், ரூபினி, ஆகியோரின் பேத்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

கேசவல் பிள்ளையார் கோவிலடி,
வண்ணார்பண்ணை.

தகவல்
எஸ். லோகநாதன்

(17256)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org